அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி
(தேசிய தரநிர்ணயக் குழுவின் மறுதரமதிப்பீட்டிலும் “ஏ”தகுதிபெற்றது)

நாள் :31.1.2017

**தமிழ்நாடு அரசு தேர்வாணையம் நடத்தும்**
**இந்து சமய அறநிலையத்துறை தேர்வுக்கான இலவசப் பயிற்சி**

தமிழ்நாடு அரசு தேர்வாணையம் இந்து சமய அறநிலையத் துறைக்கான குரூப் – VII B 29 பணியிடங்கள் மற்றும் குரூப் VIII 49 பணியிடங்கள், ஆகமொத்தம் 78 காலிப்பணியிடங்களை பொதுஎழுத்துத் தேர்வின் மூலம் நிரப்ப 25-11-2016 அன்று அறிவிப்புவெளியிட்டு இருந்தது. இதற்கான எழுத்துத்தேர்வு நடைபெறும் நாள்: 29.04.2017 மற்றும் 30.04.2017.

இந்து சமய அறநிலையத்துறை தேர்வில் கேட்கப்படும் (இந்துமதம் +சைவமும் வைணவமும்) கேள்விகளை எளிதில் எதிர்கொள்ளும் வகையில் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக தன்னார்வ பயிலும் வட்டம் சார்பில் இலவச சிறப்பு பயிற்சி வகுப்புகள் சிறந்த வல்லுநர்களை கொண்டு நடத்தப்பட உள்ளது. இதற்கான பயிற்சி வகுப்புகள் 04.02.2017 அன்று தொடங்கி ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமைகளில் காலை 10 மணிமுதல் நடைபெற உள்ளது.

இப்பயிற்சி வகுப்புகளில் பங்குபெற விருப்பம் உள்ளவர்கள் அழகப்பா பல்கலைக்கழக லெ.சித.லெ. பழனியப்பச் செட்டியார் நினைவரங்கத்தில் இயங்கும் தன்னார்வ பயிலும் வட்டத்திற்கு நேரில் சென்று தங்களது பெயரை பதிவு செய்து கொள்ளலாம். மேலும், 04565-223266 என்ற தொலைபேசியிலோ அல்லது 88707-81897 என்ற அலைபேசியிலோ தொடர்பு கொள்ளலாம். அல்லது alagappauniversitystudycircle@gmail.com என்ற மின்அஞ்சல் மூலமாகவும் பதிவு செய்யலாம்.

பேரா.வி. பாலச்சந்திரன்
பதிவாளர் (பொ.)